(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்

விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
7 சைவசமய பாடப்பரீட்சை : 2022
தரம் ஏழு



nselva.com

கால அளவு	1.30 மணி
புள்ளிகள் : 100	

இல.	9073
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. மங்களவாரம் என அழைக்கப்படும் கிழமை எது?
   1. வெள்ளிக்கிழமை 2. செவ்வாய்க்கிழமை
   3. திங்கட்கிழமை 4. புதன்கிழமை
2. தேவார திருவேடுகள் கிடைக்கப்பெற்ற இடம் எது?
   1) தில்லைச் சிற்றம்பலம் 2) திருவானைக்கா 3) திருவாவூர் 4) திருச்செந்தூர்
3. திருச்சிராப்பள்ளி குன்றுடையானுக்கு வழங்கப்படும் வேறொரு திருநாமம் எது?
   1) திருத்தோணியப்பன் 2) திருக்கடம்பூரான்
   3) தாயுமானவர் சுவாமி 4) சடங்கவியப்பன்
4. பணிவு என்னும் விழுமியப் பண்பைப் பேண எம்மில் இருந்து நீக்க வேண்டியது எது?
   1) கன்மம் 2) மாயை 3) பசு 4) அகங்காரம்
5. நட்சத்திர அடிப்படையில் அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் ஒன்று எது?
   1) வைகாசி விசாகம் 2) சோமவார விரதம்
   3) ஏகாதசி விரதம் 4) வரலட்சுமி விரதம்
6. "மாலும் அயனும் காணாத நீதியே" என சிவபெருமானை குறிப்பிட்ட சமயக்குரவர் யார்?
   1) சம்பந்தர் 2) மாணிக்கவாசகர் 3) சுந்தரர் 4) திருநாவுக்கரசர்
7. ஏகநாதர் பொறுமையைக் கடைப்பிடிக்க எந்த நதியில் 108 முறை நீராடினார்?
   1) பொன்னி நதி 2) காவேரி நதி 3) கோதாவரி நதி 4) கங்கை நதி
8. தைப்பொங்கல் தினத்திற்கு முதல் நாள் கொண்டாடப்படும் பண்டிகை
   1) சூரியப் பொங்கல் 2) போகி பொங்கல்
   3) மாட்டுப் பொங்கல் 4) காணும் பொங்கல்
9. திருதொண்டர் புராணம் என அழைக்கப்படுவது
   1) சிவபுராணம் 2) பெரியபுராணம் 3) கந்தபுராணம் 4) திருப்பல்லாண்டு
10. சைவத் திருமுறைகளைத் தொகுப்பித்தவர் யார்?
    1) இராஜேந்திர சோழன் 2) கரிகாலச் சோழன்
    3) இராஜராஜ சோழன் 4) மனுநீதி கண்ட சோழன்
11. இறைவனிடத்து மாங்கனி பெற்று கணவனுக்கு கொடுத்தவர் யார்?
    1) செம்மணச் செல்வி 2) புனிதவதி 3) ஆண்டாள் 4) மங்கையற்கரசி

12. "நிரைகழலரவம்" என்ற தேவாரம் பாடப்பெற்ற திருத்தலம் எது?
1) திருக்கோணேஸ்வரம் 2) திருக்கேதீஸ்வரம்
3) முன்னேஸ்வரம் 4) திருவையாறு

13. திருக்கடம்பூரில் எழுந்தருளியுள்ள இறைவன் யார்?
1) முருகன் 2) பிள்ளையார் 3) சிவபெருமான் 4) விஷ்ணு

14. இறைவன் தனக்கு செய்த கருணையை "அச்சோ" என விழித்துப் பாடியவர் யார்?
1) அப்பர் 2) சுந்தரர் 3) சம்பந்தர் 4) மாணிக்கவாசகர்

15. தில்லையில் திருவாதிரை திருவிழா காலத்தில் தேரோட்டம் நிகழும் போது பாடப்படுவது எது?
1) திருவிசைப்பா 2) தேவாரம் 3) திருப்பல்லாண்டு 4) புராணம்

16. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனக் கூறியவர் யார்?
1) ஔவையார் 2) திருமூலர் 3) காரைக்கால் அம்மையார் 4) கக்சியப்பர்

17. இறுதியாக மும்முறை கைகொட்டி வழிபட வேண்டியவர் யார்?
1) நந்திதேவர் 2) சண்டேஸ்வரர் 3) பிள்ளையார் 4) வைரவர்

18. "யாழ் முரி" என அழைக்கப்படும் பதிகம் எது?
1) மாதர் மடப்பிடியும் 2) மடையில் வாளை 3) சதுரம் மறை 4) மட்டிட்ட புன்னை

19. திருஞானசம்பந்தர் குருபூசை தினம் எது?
1) மாசிமகம் 2) ஆடிச்சுவாதி 3) வைகாசி மூலம் 4) சித்திரை சதயம்

20. அதிக காலம் பூமியில் வாழ்ந்த சமயக்குரவர் யார்?
1) சம்பந்தர் 2) நாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

21. படைத்தற் கடவுள் யார்?
1) பிரம்மா 2) விஷ்ணு 3) மகேசுவரன் 4) சதாசிவன்

22. சிவபெருமான் நாவுக்கரசருக்கு கைலாயக் காட்சியை கொடுத்தருளிய இடம் எது?
1) திருவையாறு 2) திருநல்லூர் 3) திருமழபாடி 4) திருமுனைப்பாடி

23. இந்தியாவிலுள்ள எந்த இடத்திலிருந்து சம்பந்தர் இலங்கையிலுள்ள சிவத்தலங்களை மனதால் வணங்கி தேவாரம் பாடினார்?
1) மதுரை 2) இராமேஸ்வரம் 3) திருச்சி 4) சென்னை

24. திருமந்திரம் யாரால் பாடப்பட்டது?
1) திருமூலர் 2) சேந்தனார் 3) சேதிராயர் 4) நக்கீரர்

25. செங்கற்களை பொன்னாகப் பெற்றுக் கொண்ட நாயனார் யார்?
1) சம்பந்தர் 2) மாணிக்கவாசகர் 3) சுந்தரர் 4) அப்பர்

(25 புள்ளிகள்)

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கொலு வைத்தலுடன் தொடர்புடைய விரதம் எது?
2. கந்த புராணம் பாடியவர் யார்?
3. வீதி விடங்கன் என்ற இளவரசனின் தந்தை பெயர் என்ன?
4. இராமபிரான் எத்தனை வருடங்கள் வனவாசஞ் செய்தார்?
5. இராமபிரான் தன் சகோதரனாக ஏற்றுக் கொண்ட வானரத் தலைவன் யார்?
6. வாஸ்து சாந்தியில் எத் தெய்வங்களை பூஜை செய்து திருப்திப்படுத்துவார்கள்?
7. புதுமனை புகுதல் என்பதனை வேறு எப்பெயரால் அழைப்பர்?

8. எம் மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமை விரதம் விசேடமானதாகும்?

9. மாசி மகத்தன்று தேர்திருவிழா நடைபெறும் ஆலயம் எது?

10. தனுராசியிலிருந்து மகரராசிக்கு சூரியன் பிரவேசிக்கும் போது கொண்டாடப்படும் பண்டிகை எது?

11. பதினோராம் திருமுறையில் பாசுரம் பாடிய பெண் அடியவர் யார்?

12. தேவாரமுதலிகள் மூவரும் யார்?

13 காரைக்கால் அம்மையாரின் இளமைப் பெயர் யாது?

14. சம்பந்தரின் அற்புதங்களால் சைவ சமயத்தை தழுவிய பாண்டிய மன்னன் யார்?

15. திருக்கேதீஸ்வரத்தின் தீர்த்தம் யாது? (15 புள்ளிகள்)

பகுதி - II

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. "நிரைகழ லரவம் சிலம்பொலி ....." 2."நந்தார் படைஞானன்...."

3. "நங்கடம்பனைப் பெற்றவள் ....." 4."முத்திநெறியறியாத ....."

(2 x 5 = 10 புள்ளிகள்)

2. பின்வரும் தொடக்கத்தையுடைய திருக்குறள்களை எழுதுக.

1. ஒழுக்கத்து நீத்தார் .....
2. செயற்குரிய செய்வார் .....
3. நிறை மொழி .....
4. ஒல்லும் வகையான் .....
5. அறத்தினூ உங்(கு) .....

(1 x 5 = 5 புள்ளிகள்)

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. அ) மாணவர்களிடையே நல்ல உளப்பாங்குகளை வளர்க்கும் முகமாக வகுப்பறையில் காட்சிப்படுத்தக் கூடியவை 3 தருக.

ஆ) பஞ்ச புராணங்கள் எவை?

இ) பசுவின் சாணத்தை அக்கினியில் சுடுவதால் பெறப்படுவது எது?

(9 புள்ளிகள்)

2. அ) வாழ்வியல் நற்பண்புகள் 3 தருக.

ஆ) பொறுமையை கடைப்பிடித்த சைவக்குரவர் இருவர் பெயர் தருக.

ஈ) "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" எனப் பாடியவர் யார்?

(9 புள்ளிகள்)

3. 1. விரதம் என்றால் என்ன?

2. திதி விரதங்கள் எவை?

3. தைப்பூசத்தினத்தில் நடைபெறும் சுபகருமங்கள் எவை? (9 புள்ளிகள்)

4. 1. சுந்தரரின் தாய் தந்தை பெயர் என்ன?

2. திருநாவுக்கரசருக்குரிய வேறு இரு பெயர்கள் தருக?

3. சிவனடியார்களைப் போற்றி சுந்தரர் பாடிய பதிகம் எது?

(9 புள்ளிகள்)

5. 1. வீடுகட்ட அத்திவாரத்திற்கு முதலில் இடப்படும் மண்வகைகள் 3 தருக.

2. புதுமனை புகுதல் என்றால் என்ன?

3. புதுமனை புகுதல் தினத்திலே வீட்டினுள்ளே நுழையும் போது கொண்டு வரப்படும் பொருட்கள் 3 தருக?

(9 புள்ளிகள்)

6. பின்வரும் தேவாரங்கள் எத்தனையாம் திருமுறையாக அமைந்துள்ளன?

அ. விருதுகுன்றாமா மேருவில்.....

ஆ. நங்கடம்பனைப் பெற்றவள்.....

இ. பொன்னார் மேனியனே.....

2. மாணிக்கவாசகருக்கு மந்திரிப்பதவி வகித்ததால் பெறப்பட்ட பெயர் யாது?

3. மாணிக்கவாசகரின் வரலாறு கூறும் நூல்கள் 2 தருக.

(9 புள்ளிகள்)